**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**

முன்னிலை திரு ஆர்.சதீஸ்குமார், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.79/2016</u>

1. அன்பு, வயது 30 த/பெ. சின்னபையன் (எ) சின்னசாமி, இந்து. விவசாயம்
2. தங்கராஜ், வயது 24 த/பெ. சின்னபையன் (எ) சின்னசாமி, இந்து. விவசாயம்
3. வெங்கடேஷ், வயது 22 த/பெ. சின்னபையன் (எ) சின்னசாமி, இந்து. விவசாயம் வாதிகள் அனைவரும் வசிப்பு: ஜிங்கல்கதிரம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

...வாதிகள்

..எதிராக..

1. ரவிச்சந்திரன், வயது 38, த/பெ. சின்னசாமி,இந்து, விவசாயம்
2. சின்னபையன் (எ) சின்னசாமி, வயது 55, த/பெ. சுருட்டைகான் (எ) சின்னசாமி இந்து, விவசாயம், 1, 2 பிரதிவாதிகள் வசிப்பிடம்: ஜிங்கல்கதிரம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
3. சார்பதிவாளர், போச்சம்பள்ளி, சார்பதிவாளர் அலுவலகம், போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
4. ஆர். சத்தியசீலன், வயது 37, த/பெ. லேட்.ராஜா, இந்து, வசிப்பிடம்: ஜம்புகுட்டப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

...பிரதிவாதிகள்

( இ.ம.எண்: 97/2017 நாள் 27.3.2017-ன் படி தாவா பிராது திருத்தப்பாடு செய்யப்பட்டது)

வழக்கு தேதி : 18.10.2016

தாவா மதிப்பு... ரூ.10,000/-

வழக்கு மூலம் : 7.7.2003, 25.10.2013, 24.11.2014, 20.12.2014, 15.10.2015, 23.7.2010, 23.09.2016, 17.10.2016, 11.11.2016.

தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டப் பிரிவுகள் 25(பி), 25(பி), 25(பி), 25(டி), 25(டி) மற்றும் 27(சி)-ன் படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.527.50.

வழக்கிடை அ-அட்டவணை சொத்துக்கள் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை அ-அட்டவணை சொத்துக்களில் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், வழக்கிடை

WEB COPY

ஆ-அட்டவணை சொத்துக்கள் 2 ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை ஆ-அட்டவணை சொத்துக்களில் 2ம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ம் பிரதிவாதியும், அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், வழக்கிடை இ-அட்டவணை சொத்துக்கள் 3 ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை இ-அட்டவணை சொத்துக்களில் 3 ஆம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு 1 ஆம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை சொத்து பெயரில் 1 ஆம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்ள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரத்தையும், 4ம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரத்தையும் ரத்து செய்ய 3ம் பிரதிவாதிக்கு உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுகளை வாதிகளுக்கு 1,2, 4 பிரதிவாதிகள் செலுத் தகோரியும் பிரதிவாதிகளுக்கு எதிராக, உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 26, விதி 1 முதல் 6 கட்டளை 7ன் கீழ் வாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு.

WEB COPY

இவ்வழக்கு 18.10.2016ம் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் ஜி.கேசவன், அவர்கள் ஆஜராகியும், 1 பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் யாரும் ஆஜரில்லாததாலும், அதுசமயம் பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும் இந்நீதிமன்றத்தின் முன்பு 11.01.2018ம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்.

**தீ ர் ப் பா ணை**

1. வழக்கிடை அ-அட்டவணை சொத்துக்கள் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து ஆணையிடப்படுகிறது.

2. வழக்கிடை அ-அட்டவணை சொத்துக்களில் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து ஆணையிடப்படுகிறது.

3. வழக்கிடை ஆ-அட்டவணை சொத்துக்கள் 2ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து ஆணையிடப்படுகிறது.

4. வழக்கிடை ஆ-அட்டவணை சொத்துக்களில் 2ஆம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ஆம் பிரதிவாதியும், அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து ஆணையிடப்படுகிறது.

5. வழக்கிடை இ-அட்டவணை சொத்துக்கள் 3ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து ஆணையிடப்படுகிறது.

6. வழக்கிடை இ-அட்டவணை சொத்துக்களில் 3-ஆம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு 1ஆம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து ஆணையிடப்படுகிறது.

7. வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்து ஆணையிடப்படுகிறது.

8. வழக்கிடை சொத்து பெயரில் 1ஆம் பிரதிவாதி, 4ஆம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்ள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்து ஆணையிடப்படுகிறது.

9. வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2ஆம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரத்தையும், 4ஆம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரத்தையும் ரத்து செய்ய 3ம் பிரதிவாதிக்கு உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

10. வாதிகளுக்கு, பிரதிவாதிகள் தாவா செலவுத் தொகையான ரூ.527.50/- ஐ கொடுக்க வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.(செலவு தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

**சொத்துவிவரம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், போச்சம்பள்ளி சார்பதிவக எல்லைக்குட்பட்ட ஜிங்கல்கதிரம்பட்டி -2 வருவாய் கிராம, பட்டா எண்.162ல்,

1. அ- அட்டவணை சொத்து:

   (i) புல எண்.413/8, புஞ்சை ஏக்கர் 0.08

WEB COPY

(ii) புல எண்.413/1, புஞ்சை ஏக்கர் 0.15

(iii) புல எண்.413/4, புஞ்சை ஏக்கர் 0.14¼

(iv) புல எண்.414/10, புஞ்சை ஏக்கர் 0.04

(v) புல எண்.417/4, புஞ்சை ஏக்கர் 0.26

(vi) புல எண்.416/16, புஞ்சை ஏக்கர் 0.19½

(vii) புல எண்.161/2, புஞ்சை ஏக்கர் 0.04

(viii) புல எண்.160/1, புஞ்சை ஏக்கர் 0.06½

(ix) புல எண்.416/4, புஞ்சை ஏக்கர் 0.22½

மொத்தம் ஏக்கர் 1.19¾ பெற்ற நிலமும், இதற்கு உண்டான மாமூல் வழிநடை பாத்தியமும் சேர்ந்து அ- அட்டவணை சொத்தாகும். இதன் மொத்த தீர்வை ரூ.0.95 பை

2. ஆ- அட்டவணை சொத்து:

(i) புல எண்.413/8, புஞ்சை ஏக்கர் 0.08

(ii) புல எண்.413/1, புஞ்சை ஏக்கர் 0.15

(iii) புல எண்.413/4, புஞ்சை ஏக்கர் 0.14¼

(iv) புல எண்.414/10, புஞ்சை ஏக்கர் 0.04

(v) புல எண்.417/4, புஞ்சை ஏக்கர் 0.26

(vi) புல எண்.416/16, புஞ்சை ஏக்கர் 0.19½

(vii) புல எண்.161/2, புஞ்சை ஏக்கர் 0.04

(viii) புல எண்.160/1, புஞ்சை ஏக்கர் 0.06½

(ix) புல எண்.416/4, புஞ்சை ஏக்கர் 0.22½

மொத்தம் ஏக்கர் 1.19¾ பெற்ற நிலமும், இதற்கு உண்டான மாமூல் வழிநடை பாத்தியமும் சேர்ந்து அ- அட்டவணை சொத்தாகும். இதன் மொத்த தீர்வை ரூ.0.95 பை

WEB COPY

3. இ- அட்டவணை சொத்து:

(i) புல எண்.413/8, புஞ்சை ஏக்கர் 0.08

(ii) புல எண்.413/1, புஞ்சை ஏக்கர் 0.15

(iii) புல எண்.413/4, புஞ்சை ஏக்கர் 0.14¼

(iv) புல எண்.414/10, புஞ்சை ஏக்கர் 0.04

(v) புல எண்.417/4, புஞ்சை ஏக்கர் 0.26

(vi) புல எண்.416/16, புஞ்சை ஏக்கர் 0.19½

(vii) புல எண்.161/2, புஞ்சை ஏக்கர் 0.04

(viii) புல எண்.160/1, புஞ்சை ஏக்கர் 0.06½

(ix) புல எண்.416/4, புஞ்சை ஏக்கர் 0.22½

மொத்தம் ஏக்கர் 1.19¾ பெற்ற நிலமும், இதற்கு உண்டான மாமூல் வழிநடை பாத்தியமும் சேர்ந்து அ- அட்டவணை சொத்தாகும். இதன் மொத்த தீர்வை ரூ.0.95 பை

**<u>செலவுத் தொகை பட்டியல் விவரம்</u>**

| | |
|---|---|
| 1. பிராது ஸ்டாம்ப் | - ரூ. 527.50 |
| 2. வக்காலத்து ஸ்டாம்ப் | - ரூ. 5.00 |
| | 532.50 |

2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19-ம் நாள் என்னுடைய கையொழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

WEB COPY

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போச்சம்பள்ளி.